

கழகத் துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். உடன் கழக வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்து மாணிக்கம், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர் ஆகியோர் உள்ளனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்குப் பகுதி, 132 (அ) வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினர். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக், தியாகராயர்நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, தொகுதிப் பார்வையாளர் பத்மப்ரியா, சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, 132 வார்டு மாமன்ற உறுப்பினர் கார்த்திகா பாஸ்கர், 132 (அ )வட்டக் கழகச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா, 132 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

### தொண்டர் அணி சிட்கோ எஸ். அன்வர்தீன் - கவிஞர் ச.ச.கலையரசன் முன்னிலை

# ‘கவிஞர் குரல்’ பதிப்பகம் நூல் வெளியீட்டு விழா!

### அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வெளியிட ஜோசப் சாமுவேல் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை, ஜன.6-

சென்னை கவிஞர் குரல் பதிப்பகம் சார்பில் 86 வது சென்னை பெரு நகராட்சி உறுப்பினர் எம். கமல் தலைமையில் பதிப்பாசிரியர் கவிஞர் க.ச. கலையரசன் வரவேற்புரை தொண்டர் அணி தோழர் சிட்கோ எஸ். அன்வர்தீன், சு.ஞானசேகரன், கவிஞர் மீரா ( எ ) மீனாட்சி சுந்தரம் கவிஞர் எடையூர் நாகராஜன், கே.ஏ.நாகூர் மீரான், எம். சக்திவேல், தஞ்சை ராம் கம்பர், மு . தேவராசன் முன்னிலையில் 86 வது சென்னை பெரு நகராட்சி உறுப்பினர் எம் கமல் தலைமையில் ( மு .க .எனும் முகவரி ) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூறு கவிஞர்கள் நூறு கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று (06:01:25 திங்கள் கிழமை) காலை 11 மணியளவில், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக கட்டிட வளாகத்தில் நடைபெறுகிறது. உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நூல் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்

முதல் பிரதி பெற்று வாழ்த்துரை அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கவிஞர் கவிதைப் பித்தன், அருட்சுடர் .த.சந்திரசேகர் ஜெ. முகம்மது மீராசாகிப் மா. வள்ளிமைந்தன் . வா.மு. சேதுராமன் .தமிழ் அமுதன். மு.ஞானமூர்த்தி .பா.சம்பத்குமார். அரிமா டாக்டர் சிந்தைவாசன் த.கண்ணபிரான். பொற்கொடி கண்ணபிரான் மற்றும் கவிஞர்கள் கலந்துக் கொண்டு நூலை பெறுகிறார்கள்.

நன்றியுரை: ஆன்மீகச்சுடர் ஈ.ஆறுமுகம்.

### வே.முருகன் தலைமையில் - இரா.துரைராஜ் முன்னிலையில்

# சைதை கிழக்கில் தமிழர் திருநாள் பொங்கல் விழாப் போட்டிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசுகள் வழங்குகிறார்!

சென்னை, ஜன. 6 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172 அ வட்டத்தில் தமிழர் திருநாள் தைப் பொங்கல் விழா இன்று (6.1.2025 - திங்கள்கிழமை) காலை 6 மணி முதல் மாவட்டப் பிரதிநிதி வே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலை வகித்து கோலப் போட்டியை தொடங்கி வைக்கிறார்.

நிகழ்ச்சிகள் வருமாறு இன்று காலை 6 மணி காலை 7 மணி வரை கோலப் போட்டி, 7 மணிக்கு நடுவர்கள் கோலப் போட்டியை பார்வையிடுகின்றர்.

பொங்கல் விழாவையொட்டி நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா இன்று மாலை 5 மணிக்கு 100 அடி சாலை கீதம் ஓட்டல் அருகில் நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைஅமைச்சருமான மா.சுப்பிரமணியன் முதல் மூன்று பரிசுகள் மற்றும் போட்டியில் பங்கேற்றவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பகுதிக் குட்பட்ட மவாட்ட, பகுதி நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், பாகப் பொறுப்பாளர்கள், வட்ட அணிகளின நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.



தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலசந்திரன் புதிய அலுவலகத்தில் நேரில் சந்தித்து மக்களின் பல்வேறு கோரிக்கைகளை தெரிவித்து ஆலோசனை மேற்கொண்டனர். உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழுத் தலைவர்கள் டி காமராஜ், எஸ்.இந்திரன், வே.கருணாநிதி, இஜோசப் அண்ணாதுரை, ஜெயபிரதீப் சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசுகள் வழங்கினார்!

# 139 அ வட்டத்தில் பொங்கல் விழா கோலப் போட்டிகள்!

### அட்கோ கமலநாதன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - எம்.ஸ்ரீதரன்- சைதை சாதிக் பங்கேற்பு!

சென்னை, ஜன. 6 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 139 வது வட்ட தி.மு.க. சார்பில் வட்ட செயலாளர் அட்கோ கமலநாதன் தலைமையில் சிறுபான்மையினர் நல உரிமை பிரிவின் மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் ஒருங்கிணைப்பில் 139 வது வட்டத்தில் உள்ள 19 பாகங்களில் உள்ள அனைத்து தெருக்களிலும், தைத்திருநாளாம் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை முன்னிட்டு மாபெரும் கோலப்போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையிலும், பொதுக்குழு உறுப்பினரும், 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன், பகுதி பொருளாளர் வி . பி . ஜானகிராமன், 139வது “அ” வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர், ஆகியோர் வரவேற்பில் சைதாப்பேட்டை ராகவா ரெட்டி காலனியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் முதல் பரிசு பெற்றவருக்கு வாஷிங் மெஷினும், இரண்டாம் பரிசு பெற்றவருக்கு கிரைண்டரும், மூன்றாம் பரிசு பெற்றவருக்கு மிக்சியும் வழங்கினார்.

மேலும் போட்டியில் பங்கேற்ற அனைத்து மகளியர் 1920 பேருக்கு சில்வர் ஹாட்பாக்ஸ் வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் 168வது வார்டு மாமன்ற உறுப்பினர் த.மோகன்குமார், 139வது வார்டு மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, பகுதி கழக நிர்வாகிகள், த.சம்பத், ஆர். ரமேஷ், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், மாவட்ட பிரதிநிதிகள் டி.என்.சிவமணி, வீ.மதிவாணன், ஜி.கே.ராமச்சந்திரன், கிண்டி செல்வம், பொன் ஜெய்சிங், பகுதி இளைஞர் அணி நிர்வாகி கள் ஜிம்பிரபு, சத்யா, வட்டகழக நிர்வாகிகள் மு.கதிரவன், பொ. பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்திசுந்தரம், அயாத் பாஷா உள்ளிட்ட அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டசெயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பெருந்திரளாக இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய கழக செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு ஏற்பாட்டில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம், கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ,. சமத்துவ பொங்கல் இட்டு பொங்கல் விழாவை கொண்டாடினர். தொடர்ந்து 1500 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளுக்கு வேஷ்டி சட்டை, சேலை உள்ளிட்ட பொங்கல் பரிசாக வழங்கினார். இதில் வாலாஜாபாத் பெருந் தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ராஜலட்சுமி குஜராஜ், எஸ்.பி.பூபாலன், ஒன்றிய அவைத் தலைவர் வி.பழனி, வி.வெங்கட்ராமன், கவிதா டில்லிபாபு, கே.ஆறுமுகம் , கே.பார்த்திபன், எம்.திருஞானசம்பந்தம், எம்.அருள்முருகன், என்.ஜெயபால், ஆர்.கே.சசிகுமார், ஈ.அப்பன் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள் – நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

### உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா

# 172 அ வட்டத்தில் நல உதவிகள் வழங்கல்!

### எஸ்.ஆர்.செந்தில் தலைமையில்

சென்னை, ஜன. 6 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172 அ வட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ‘உதய நாள் விழா’ மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ் ஆலோசனைப்படி வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.செந்தில் நேற்று (5.1.2025 - ஞாயிற்றுக்கிழமை) மடுவின்கரை செங்கேனியம்மன் கோவில் தெருவில் பிளாஸ்டிக் ட்ரம்களை சுமார் 500 பேருக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி வி. ரமேஷ்குமார், அவை தலைவர் தா.கோ. வெங்கடேசன் , பி.பிரகாஷ் , பகுதி பிரதிநிதி ஆர். சீனிவாசன், மாவட்டத் துணை அமைப்பாளர் எஸ். ஜெயராமன், செயற்குழு உறுப்பினர்கள் த.ரவீந்தர், கே.சுகுமார், ஏ.சுரேஷ், பொ.ராஜாராம், ராஜாங்க தங்கமணி, இ.பி. திருவேங்கடம், பி.எஸ்.என். எல். கிருஷ்ணன், லோகு , வி.கே.ராமு, டைல்ஸ் மோகன், பூக்கடை ஜெ. வாசு, கே.முனுசாமி, துரை பாண்டி, ரங்கன், ரஜினி, சத்யராஜ், பாஸ்கர், சேகர், பிரகாஷ், பாபு கழகத் தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

# 137 ‘ஆ’ வட்ட கழக நிர்வாகிகள் பாக நிர்வாகிகள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் அ. கதிரேசன் அறிவிப்பு!

சென்னை, ஜன. 6 -

கலைஞர் நகர் தெற்குப் பகுதி 137 ஆ வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவித்துள்ளார்.

அது வருமாறு

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழக நிர்வாகிகள் பாகத் தலைவர்கள் கூட்டம் எம்.ஜி.ஆர். நகர் அண்ணா மெயின் ரோடு, கலைஞர் நகர் தெற்கு பகுதிக் கழக அலுவலகத்தில் இன்று (06.01.2025 - திங்கள் கிழமை) மாலை 7 மணி அளவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்டக் கழக அவைத் தலைவர் என்.சக்கரவர்த்தி தலைமை தாங்குகிறார். இக்கூட்டத்தில் 137 ஆ வட்ட கழகத்திற்கு உட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பாகத்தலைவர்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. தம்பையா
### சனவரி 6 (2023)



கழகம் தொடங்கிய நாள் முதலே உறுப்பினராகி, கழகத்தின் சார்பில் மன்றம், படிப்பகம் தொடங்கி கழகக் கொள்கைகளை தனது பகுதியில் பரப்பியதோடு, அதில் இரவு பாடசாலை நடத்தியவர்.

பகுதி பிரதிநிதி, இரு முறை வட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்கு பாடுபட்டவர்.


பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின்னர் சைதை தொகுதியில் முதன்முதலாக சிலை வைத்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. மாயவன்
### சனவரி 6 (1998)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கடலூர் மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**